
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 33 - வரலாறு

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

### 33 - வரலாறு

### புள்ளி வழங்கும் திட்டம்

வரலாறு I 02 x 40 = 80 புள்ளிகள்

வரலாறு II

1 ஆம் வினா கட்டாயமானது

அ. I 18

II 12 = 30 புள்ளிகள்

### பகுதி II

வினா இலக்கம் 2 = 18 புள்ளிகள்
வினா இலக்கம் 3 = 18 புள்ளிகள்
வினா இலக்கம் 4 = 18 புள்ளிகள்
வினா இலக்கம் 5 = 18 புள்ளிகள்
வினா இலக்கம் 6 = 18 புள்ளிகள்
வினா இலக்கம் 7 = 18 புள்ளிகள்

} ஏதாவது 4 க்கு $4 \times 18 = 72$ புள்ளிகள்

### பகுதி III

வினா இலக்கம் 8 = 18 புள்ளிகள்
வினா இலக்கம் 9 = 18 புள்ளிகள்

} ஏதாவது 1 க்கு $1 \times 18 = 18$ புள்ளிகள்

**இறுதிப் புள்ளி கணித்தல்**

வரலாறு I - 80 புள்ளிகள்

வரலாறு II - 120 புள்ளிகள்

மொத்தம் - 200

இறுதிப்புள்ளி - $\frac{200}{2}$ = 100 புள்ளிகள்



Download all Past Papers>> https://bookbeeclub.com/resource/past-papers/

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ......................................................................
......................................................................
...................................................................... ✓ △ $\frac{4}{5}$

(ii) ......................................................................
......................................................................
...................................................................... ✓ △ $\frac{3}{5}$

(iii) ......................................................................
......................................................................
...................................................................... ✓ △ $\frac{3}{5}$

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம / மேலதிக பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II, III" எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

ooo



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**33 T I**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

ඉතිහාසය I
வரலாறு I
History I

05.12.2018 / 1300 - 1400

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
*One hour*

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** மகாவம்சம் சிறப்புக்குரியதாய் அமைவது,
(1) அரசியல் மற்றும் மதத் தகவல்களைத் தொடர்ச்சியாக கொண்டிருப்பதனால் ஆகும்.
(2) சமகால நிகழ்வுகளைப் பதிவு செய்திருப்பதனால் ஆகும்.
(3) மிகப் பழைமை வாய்ந்த வம்சக் கதையாக அமைந்திருப்பதனால் ஆகும்.
(4) அடங்கியுள்ள தகவல்கள் நம்பகத் தன்மையுடையதாயிருப்பதனாலாகும்.

**2.** தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் சீன, உரோம, அராபிய மற்றும் இந்திய நாணயங்கள் இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றின் மூலம் வெளிப்படும் மிகமுக்கியமான விடயம்
(1) இலங்கையில் முன்னேற்றமடைந்த ஒரு பொருளாதார முறை காணப்பட்டமையாகும்.
(2) இலங்கையில் நாணயங்களின் புழக்கம் பிரபல்யமாக காணப்பட்டமையாகும்.
(3) இலங்கைக்கும் அந்நிய நாடுகளுக்குமிடையில் முன்னேற்றகரமான வர்த்தகத் தொடர்புகள் காணப்பட்டமையாகும்.
(4) உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருக்கலாம் என்பதாகும்.

**3.** இலங்கையின் வரலாற்றைக் கற்கும்போது பின்வரும் எக்காலக் கட்டத்துடன் தொடர்புபட்ட விதத்தில் தூதுக்காவியம், புகழ்காவியம், போர்க்காவியம் ஆகிய மூலாதாரங்கள் முக்கியத்துவமுடையனவாய் விளங்குகின்றன?
(1) பொலன்னறுவைக் காலம் தொடக்கம் தம்பதெனிய காலம் வரை
(2) தம்பதெனிய காலம் தொடக்கம் கம்பளைக் காலம் வரை
(3) கம்பளைக் காலம் தொடக்கம் கோட்டைக் காலம் வரை
(4) கோட்டைக் காலம் தொடக்கம் கண்டிக் காலம் வரை

**4.** கல்வெட்டுக்களில் சூரியன், சந்திரன் ஆகிய குறியீடுகள் எதனைச் சித்திரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன?
(1) செழிப்பு (2) உறுதிப்பாடு (3) மழை (4) அரச உடைமை

**5.** நாம் தொல்பொருள்களை பாதுகாக்க வேண்டும். ஏனெனில் அவை,
(1) இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டும் சான்றுகளாக இருப்பதனாலாகும்.
(2) சுற்றுலாத்துறைக்கு முக்கியத்துவமுடையதாக இருப்பதனாலாகும்.
(3) பௌத்த, இந்து கட்டட நிர்மாணக் கலைகளாக இருப்பதனாலாகும்.
(4) கடந்த கால கலைத்திறன்களை வெளிக்காட்டும் ஆதாரங்களாக இருப்பதனாலாகும்.

**6.** வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ள மிகப்பழைமை வாய்ந்த இடமாகக் கருதப்படுவது
(1) குறுவிட்ட பட்டதொம்பலென (2) கித்துல்கல பெலிலென
(3) பாகியன்கலலென (4) அத்தனகொட அலுலென

Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

7. பின்வரும் நிரல் I இல் தரப்பட்டுள்ள தகவல்கள் நிரல் II இல் தரப்பட்டுள்ள தொழில்நுட்ப நிர்மாணங்களுடன் ஏதோவொரு வகையில் தொடர்புபடுகின்றன. நிரல் I இற்கு அமைவாக நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும்போது பெறப்படும் சரியான விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. தூய படிகம் | A - குளம் |
| 2. வேகமான காற்றுச் சக்தி | B - நுண்கருவிகள் |
| 3. சிறிய குன்றுகள் | C - அணைக்கட்டு (அமுன) |
| 4. ஆற்றின் வளைவு | D - இரும்பைப் பிரித்தெடுத்தல் |

(1) A, B, C, D (2) B, D, A, C (3) C, B, A, D (4) D, A, B, C

8. இலங்கையின் வரண்ட வலயத்தில் நதிக்கரைகளுக்கு அப்பால், சிறுகுள முறைமையினை அண்டியதாகக் குடியிருப்புப் பரம்பல் ஏற்பட்டதெனக் கருதப்படுவது,
(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலாகும்.
(2) முன்வரலாற்றுக் காலத்திலாகும்.
(3) ஆரம்ப வரலாற்றுக் காலத்திலாகும்.
(4) வரலாற்றுக் காலத்திலாகும்.

9. சிறுகுள தொகுதிக்குப் பொறுப்பாக இருந்தவர்
(1) மபுறுமுகா (2) பருமக (3) கமிக (4) கஹபதி

10. ஒழுங்கமைப்புடன் கூடிய மத்தியமயமான நிர்வாகத்தைக் கொண்ட, பூரண வசதிகளையுடைய தலைநகரை அமைத்தவர்
(1) விஜயன் (2) அனுராத (3) உபதிஸ்ஸ (4) பண்டுகாபயன்

11. புராதன கட்டடக்கலை நிர்மாணிப்புகளில் கழிவுப்பொருள்கள் முகாமைத்துவம் (waste management) தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டமைக்கான சிறந்த உதாரணம்
(1) சிகிரியா அரண்மனையாகும். (2) ஆலாகன பிரிவேனாவாகும்.
(3) மிகிந்தலை தானசாலையாகும். (4) மெதிரிகிரிய வட்டதாகேயாகும்.

12. புராதன இலங்கையில் மூன்று போகங்கள் பயிர்ச்செய்கை இடம்பெற்றதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. மூன்றாவது போகப் பயிர்ச்செய்கை தீர்மானிக்கப்பட்டது,
(1) கிராமத் தலைவரின் தன்னிச்சையான முடிவின்படியாகும்.
(2) கடந்த போகத்தில் கிடைத்த அறுவடையை அடிப்படையாகக் கொண்டதாகும்.
(3) விவசாயிகளின் அக்கறையினாலாகும்.
(4) நீரைப் பெற்றுக்கொள்ளும் தன்மையைப் பொருத்தாகும்.

13. இலங்கையைக் குறிப்பதற்காக அராபியர் வழங்கிய பெயர்
(1) செய்லோன் (2) தப்ரபேன் (3) செரண்டிப் (4) தம்பபண்ணி

14. பொலன்னறுவை காலப்பகுதியில் கற்றூண்கள் (காவுத கணு) பயன்படுத்தப்பட்டது,
(1) பெருந்தெருக்களின் தூரத்தைக் காட்டுவதற்காகும்.
(2) அரசின் உடைமையைக் காட்டுவதற்காகும்.
(3) கால்வாய்களின் நீளத்தைக் காட்டுவதற்காகும்.
(4) சரணாலயங்களின் எல்லைகளைக் காட்டுவதற்காகும்.

15. கீழே A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளில் கலிங்கமாகனின் ஆக்கிரமிப்பு இடம்பெற்ற காலத்தில் வாழ்ந்த ஒருவருக்கு அறிந்துகொள்ள **முடியாத** நிகழ்வுகளை உள்ளடக்கிய விடை யாது?
A – இப்னு பதூதா என்ற அராபிய யாத்திரிகன் இலங்கைக்கு வருகை தந்தமை
B – ருவன்வெலி தூபம் அமைக்கப்பட்டமை
C – முதலாம் காசியப்பன் சிகிரியாவைத் தனது நிர்வாக மத்தியநிலையமாக தெரிவு செய்தமை
D – இளவரசன் சபுமால் சிறிது காலம் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தமை

(1) A, B (2) A, D (3) B, D (4) C, D

Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**16.** அதிகளவு பாரத்தைத் தாங்கக் கூடியவாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டடக்கலை நிர்மாணிப்புகளில் நவீன கொங்கிறீட் தொழில்நுட்பத்துக்கு ஈடான முறை பின்பற்றப்பட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப் பெறுவது.
(1) ருவன்வெலிசாய அத்திவாரத்திலாகும்.
(2) மல்வத்து ஓயாவுக்கு மேலான கற்பாலத்திலாகும்.
(3) மாதுறு ஓயாவின் கலிங்கல்லிலாகும்.
(4) சிகிரியா பெரும் குளக்கட்டிலாகும்.

**17.** இலங்கையில் அரசுரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பெண்ணின் பங்களிப்பு முக்கியமானதாய் அமைந்திருந்தது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம்
(1) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் தோனா கதரினாவைத் திருமணம் செய்துகொள்ளல்
(2) முதலாம் விஜயபாகு மன்னன் இளவரசி திரிலோகசுந்தரியைத் திருமணம் செய்துகொள்ளல்
(3) இளவரசி மித்தா பாண்டிய இளவரசனைத் திருமணம் செய்துகொள்ளல்
(4) இளவரசன் சாலிய அசோகமாலாவைத் திருமணம் செய்துகொள்ளல்

**18.** தளபதி செங்ஹோவினால் இந்நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட சீன இராணுவ ஆக்கிரமிப்புப் பற்றிக் குறிப்பிடப்படும் ஆட்சிக்காலம் யாது?
(1) தம்பதெனிய (2) யாப்பகுவ (3) கம்பளை (4) கோட்டை

**19.** ஐரோப்பியர்கள் இலங்கையின் எந்த வர்த்தகப் பொருளைப் பெற்றுக்கொள்வதற்காகக் கடுமையான போட்டியில் ஈடுபட்டனர்?
(1) கறுவா (2) இரத்தினக் கல் (3) பாக்கு (4) யானைத் தந்தம்

**20.** கீழே A தொடக்கம் F வரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சியாளர்களுள் போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றிய ஆட்சியாளர்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
A – டொன் யுவான் தர்மபால B – எதிர்மன்ன சிங்கம்
C – சங்கிலியன் D – முதலாம் இராஜசிங்கன்
E – ஏழாம் புவனேகபாகு F – வரோதயன்
(1) A யும் B யும் (2) B யும் C யும் (3) C யும் D யும் (4) E யும் F உம்

**21.** இலங்கையில் பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களோடு தொடர்புடைய சில முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை இடம்பெற்ற வரலாற்றுத் தொடரொழுங்கை காட்டும் விடை எது?
A – பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை
B – சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம்
C – செனட் சபை
D – சர்வஜன வாக்குரிமை
(1) A, B, D, C (2) A, C, D, B (3) B, A, D, C (4) B, D, A, C

● பின்வரும் கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு **22**, **23** ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

A – புதிய வரிகளை விதித்தல்
B – சுதேச உத்தியோகத்தர்கள் மூலம் வரி வசூலித்தல்
C – உயர்குடிப் பிரதானிகளின் உத்தியோகபூர்வப் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல்
D – விதிக்கப்பட்ட வரிகளை பணமாக செலுத்துமாறு கட்டளையிடல்
E – ஒல்லாந்தரின் நீதிமன்ற முறைமையை மீண்டும் தாபித்தல்

**22.** கி.பி. 1797 இல் ஆங்கில வர்த்தகக் கம்பனிக்கு எதிராகக் கரையோர மாகாணங்களில் ஏற்பட்ட கலகத்திற் செல்வாக்கு செலுத்திய காரணிகளைக் கொண்ட விடை யாது?
(1) A யும் C யும் (2) A யும் D யும் (3) B யும் D யும் (4) C யும் D யும்

**23.** மியூரன் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உள்ளடக்கிய விடை எது?
(1) A யும் B யும் (2) A யும் E யும் (3) B யும் C யும் (4) B யும் E யும்

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

● கீழே A தொடக்கம் F வரையில் தரப்பட்டுள்ள கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு, **24** முதல் **26** வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A – முஸ்லிம்நேசன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டமை
B – கொழும்பில் பௌத்த பிரம்ம ஞான (பரம விஞ்ஞார்த்த) சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை
C – கொழும்பு சாஹிராக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை
D – உதயபானு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டமை
E – வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை
F – இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை

**24.** சேர் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களோடு தொடர்புடைய கூற்றுகளைக் கொண்ட விடை எது?
(1) A யும் Bயும் (2) B யும் Dயும் (3) B யும் E யும் (4) C யும் Eயும்

**25.** சித்திலெப்பை அவர்களுடன் தொடர்புடைய கூற்றுகளைக் கொண்ட விடை எது?
(1) A யும் Cயும் (2) A யும் D யும் (3) B யும் D யும் (4) C யும் D யும்

**26.** ஆறுமுகநாவலருடன் தொடர்புடைய கூற்றுகளைக் கொண்ட விடை எது?
(1) A யும் D யும் (2) B யும் C யும் (3) C யும் D யும் (4) D யும் F உம்

**27.** முதலாளி, தொழிலாளர், மத்திய வகுப்பினர் ஆகிய மூன்று சமூக வர்க்கங்கள் பின்வருவனவற்றுள் எதன் விளைவாகத் தோற்றம் பெற்றன?
(1) தொழிற்புரட்சி (2) பிரான்சியப் புரட்சி
(3) மறுமலர்ச்சி (4) அமெரிக்கச் சுதந்திரப் போர்

**28.** 1978 அரசியல் யாப்புக்கு அமைவாக பிரஜையொருவரின் அடிப்படை மனித உரிமைகளும் குடிமகன் ஒருவரின் பூரண சுதந்திரமும் மீறப்படும்போது குறிப்பிட்ட பிரஜை மனுத்தாக்கல் செய்யக்கூடியது,
(1) மேன்முறையீட்டு நீதிமன்றத்திலாகும்.
(2) உச்ச (உயர்) நீதிமன்றத்திலாகும்.
(3) மேல் நீதிமன்றத்திலாகும்.
(4) நீதவான் (மஜிஸ்ட்ரேட்) நீதிமன்றத்திலாகும்.

**29.** நேரடி ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பமாக கருதக்கூடியது
(1) பாராளுமன்ற விவாதங்களை நடாத்துதல்
(2) ஊடகங்கள் மூலம் அபிப்பிராயங்களை விசாரித்தறிதல்
(3) பொதுசன அபிப்பிராய தேர்தலை நடாத்துதல்
(4) விகிதாசார பிரதிநிதித்துவ முறையினை நடைமுறைப்படுத்துதல்

**30.** ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் பிரபல்யமானவர்களின் பெயர்கள் நிரல் I இலும் அவர்கள் பிரபல்யமடைந்த துறைகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு அமைவாக நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும்போது பெறப்படும் விடை யாது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. மைக்கல் ஆஞ்சலோ | A - நாடுகாண் பயணங்கள் |
| 2. பர்த்தலோமேயு டயஸ் | B - சித்திரக்கலை |
| 3. வில்லியம் ஹாவே | C - சமய சீர்திருத்தம் |
| | D - மருத்துவம் |

(1) A, C, D (2) B, A, D (3) B, C, D (4) C, B, D

**31.** ஜேர்மன் பேரரசு ஒன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட முதல் ஆட்சியாளர்
(1) ஒட்டோவொன் பிஸ்மார்க் (2) இரண்டாம் வில்லியம் கெய்சர்
(3) வொன் வோல் கே (4) அடோல்ப் ஹிட்லர்


Download all Past Papers>> https://bookbeeki.com/resource/past-papers/

● கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுகளை / சோடிச் சொற்களை அவதானித்து, வினா **32** தொடக்கம் **34** வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1. சர்வதேச சங்கம்
2. ஐக்கிய நாடுகள் சபை

B – 1. உலக சமாதானம்
2. பொருளாதாரத் தடைகள்

C – 1. இரண்டாம் உலக மகாயுத்தம்
2. இஸ்ரேல்

D – 1. சூழல் மாசடைதல்
2. தொழில்மயமாக்கம்

**32.** முதலாவதன் அதிகரிப்புக்கு இரண்டாவதன் அதிகரிப்பு காரணமாக அமைவதனை எடுத்துக் காட்டும் சோடிக் கூற்றுகளை / சோடிச் சொற்களைக் கொண்ட தெரிவு எது?
(1) A (2) B (3) C (4) D

**33.** முதலாவதன் தோல்வி இரண்டாவதன் ஆரம்பத்திற்கு காரணமாக அமைந்ததனை எடுத்துக் காட்டும் சோடிக் கூற்றுகளை / சோடிச் சொற்களைக் கொண்ட தெரிவு எது?
(1) A (2) B (3) C (4) D

**34.** இரண்டாவது முதலாவதன் விளைவாகும் என்பதனை எடுத்துக் காட்டும் சோடிக் கூற்றுகளை / சோடிச் சொற்களைக் கொண்ட தெரிவு எது?
(1) A (2) B (3) C (4) D

**35.** இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் மார்ஷல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கான நோக்கம்
(1) அழிவுக்குள்ளான தோல்வியடைந்த ஐரோப்பிய நாடுகளைக் கட்டியெழுப்புதல்
(2) குடியேற்ற நாடுகளில் சமூக, பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துதல்
(3) நட்பு நாடுகள் உலக யுத்தங்களில் ஈடுபட்டதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துதல்
(4) அணுவாயுத உற்பத்தியையும் உபயோகத்தையும் வரையறுத்தல்

**36.** பாசிசவாதத்திற்கு எதிரானவர்களை அழிப்பதற்காக 'கருஞ்சட்டை இராணுவம்' என்னும் பெயரிலான ஆயுதப் படையை பயன்படுத்திய சர்வாதிகார ஆட்சியாளர்
(1) பெனிடோ முசோலினி (2) அடோல்ப் ஹிட்லர்
(3) வூட்ரோ வில்சன் (4) வின்ஸ்டன் சேர்ச்சில்

● கீழே A, B என்பனவற்றில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **37, 38** ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

A – பொஸ்டன் தேநீர் விருந்து
B – பேர்ள் துறைமுகத்தின் மீதான தாக்குதல்

**37.** அமெரிக்காவின் சுதந்திரப் போராட்டம் தொடர்பாக,
(1) A யும் B யும் சரியானவை. (2) A யும் B யும் பிழையானவை.
(3) A சரியானது; B பிழையானது. (4) A பிழையானது; B சரியானது.

**38.** இரண்டாவது உலக மகாயுத்தம் தொடர்பாக,
(1) A யும் B யும் சரியானவை. (2) A யும் B யும் பிழையானவை.
(3) A சரியானது; B பிழையானது. (4) A பிழையானது; B சரியானது.

**39.** தமது அரசியல் அதிகார முகாம்களின் வெற்றிக்காக, போர் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தந்திரோபாயமான முறையில் செயற்படும் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
(1) அணுவாயுதக் களைவு (2) எரிபொருள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தல்
(3) பொருளாதாரத் தடைகளை விதித்தல் (4) பனிப்போர்

**40.** கூட்டுச்சேரா நாடுகள் (அணிசேரா) இயக்கத்தைத் தாபிப்பதில் முன்னோடியாகத் தொழிற்பட்ட யூகோஸ்லேவியாவின் ஜனாதிபதி
(1) அப்துல் கமல் நஸார் (2) மார்ஷல் டிட்டோ
(3) ஸ்ரீ ஜவஹர்லால் நேரு (4) லீ குவான் யூ

* * *

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **33**

විෂයය / பாடம்: **வரலாறு**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 3 | 12. | 4 | 22. | 2 | 32. | 4 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 4 | 33. | 1 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 3 | 34. | 3 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 1 | 35. | 1 |
| 06. | 3 | 16. | 1 | 26. | 4 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 1 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 2 | 38. | 4 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 3 | 39. | 4 |
| 10. | 4 | 20. | 3 | 30. | 2 | 40. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **02** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **02 × 40 = 80**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: $\frac{25}{40}$

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: $\frac{50}{80}$



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/


33 STE II

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2018

ඉතිහාසය II
வரலாறு II
History II

1. (අ) (i)
1. (அ) (i)
1. (a) (i)


විභාග අංකය / சுட்டெண் / Index No. ..........................





Download all Past Papers - https://bookbeekie.com/resource/past-papers

1. (අ) (ii)
1. (அ) (ii)
1. (a) (ii)




Download all Past Papers - https://bookbeekid.com/resource/past-papers/

# வரலாறு II

## பகுதி I

1. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் **அனைத்தையும்** தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படப் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) கல் ஓயா, யான் ஓயா, பதவியா வாவி, மினிப்பே அணைக்கட்டு, கம்பளை, புத்தளம், ஊராத்தோட்டை, நீர்கொழும்பு, திருக்கேதீஸ்வரம், கலாதீர்த்த, ஜம்புகோள பட்டணம், மினிகாகல்கந்த(12 புள்ளிகள்)

(ii) வத்திக்கான், பர்மா, கள்ளிக்கோட்டை, பத்தேவியா, ஹிரோசிமா, சுயெஸ் கால்வாய் (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே $A, B, C, D$ ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை **ஒழுங்குமுறைப்படி** உங்கள் விடைத்தாளில் எழுதுக.

*A* - முதலாம் விஜயபாகு மன்னனின் கூலிப் படையினரின் பெயர்
*B* - கி.பி. 1498 இல் இந்தியாவை அடைந்த போர்த்துக்கேய கடலோடி
*C* - இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது நேசநாட்டு அணிக்குத் தலைமை தாங்கிய பிரித்தானியப் பிரதமர்
*D* - இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது ஜப்பானில் ஆட்சி புரிந்த பேரரசன் (04 புள்ளிகள்)

- *A, B* ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, வினவப்பட்ட வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் **ஒழுங்கில்** உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. '*A*' எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிற்பத்தின் பெயர் என்ன?
2. இதனைக் காணக்கூடிய புனிதத்தலம் எது?
3. இச்சிற்பத்தில் காணப்படுபவர் யார் என இனங்காணப்பட்டுள்ளார்?
4. இக்கலைப் படைப்பு இலங்கையின் எந்த இராச்சியத்திற்குரியது?

(04 புள்ளிகள்)



*A*

(iii) 1. '*B*'இனால் காட்டப்பட்டுள்ள சித்திரத்தில் காணப்படுகின்றவரின் பெயரினைக் குறிப்பிடுக.
2. இவர் இலங்கையில் எந்த இராச்சியத்தின் ஆட்சியாளராவார்?
3. அரியணை ஏறுவதற்கு முன்னர் இவர் எப்பெயரால் அழைக்கப்பட்டார்?
4. இந்த சித்திரத்தை வரைந்தவராக கருதப்படுகின்றவரை பெயரிடுக.

(04 புள்ளிகள்)



*B*

1.

அ.

(i).இடம் குறித்தல் 1 x 12 = 12 புள்ளிகள்

(கலாதீர்த்த எனும் இடத்திற்கு அனைத்து மாணவர்களிற்கும் ஒரு (1) புள்ளி வழங்கவும்)

(ii).இடம் குறித்தல் 1 x 06 = 06 புள்ளிகள்

ஆ.

(i).A - வேளைக்காரப் படை
B - வாஸ்கொடகாமா
C - சேர். வின்சன் சேர்ச்சில் / வின்சன்ட் சேர்ச்சில்
D - ஹிரோஹித்தோ ( 01 x 04 = 04 புள்ளிகள் )


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

(ii)

1. குதிரைத்தலையும் மனிதனும் / மனிதனும் குதிரைத் தலையும்
2. இசுறுமுனிய / இசுறுமுனிய விகாரை
3. பர்ஜன் / பர்ஜன் தெய்வம்
4. அநுராதபுரம்

( 01 x 04 = 04 புள்ளிகள் )

(iii)

1. 2ம் இராஜசிங்கன்
2. கண்டி / செங்கடகல / மலைநாடு / உடரட்ட
3. மகா ஆஸ்தான / மகா ஆஸ்தான குமார
4. ரொபர்ட் நொக்ஸ்

( 01 x 04 = 04 புள்ளிகள் )

**02. நோக்கம்**

- வரலாற்று யுகங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைக் கோலங்களை இனங்கண்டு அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை விளக்கிக் கூறுவர்.

2. (i) *A* - இலங்கையில் முதன் முதலில் குடியேறிய மனிதன் என்ன பெயரால் இனங்காணப்படுகின்றான்?

*B* - அவர்கள் இலங்கையில் பரம்பி வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) முன் வரலாற்றுக் காலம் மாற்றங்களுக்கான சகாப்தமாகக் கருதப்படுவதற்கு ஏதுவான **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஆரம்ப வரலாற்றுக் காலத்தின் குடியிருப்புகளது இயல்பினை **இரண்டு** காரணிகளினூடாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) வரலாற்று யுகத்தில் நடைமுறையிலிருந்த பொருளாதார அமைப்பில் விவசாயம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

A. ஹோமோ செப்பியன்ஸ் / ஆதி ஹோமோ செப்பியன்ஸ்

B. ஈரவலயம் (தாழ்நில இடை ஈரவலயம், மலைநாட்டு ஈரவலயம், உயர் மலைநாட்டு ஈரவலயம்

- அரைவறள் வலயம்
- தாழ்நில உலர் வலயம்
- தாழ்நில இடை உலர் வலயம்
- வறள் வலயம்
- மலைநாட்டு இடை உலர்வலயம்
- தாழ்நில அதிவறள் வலயம்
- தாழ்நில குறை வரள்வலயம்

மேல் காணப்படுபவைகளுள் 2 இனை மட்டும் குறிப்பிடுக.

( 01 + 02 = 03 புள்ளிகள் )

(ii)

- மட்பாண்ட பாவனை ஆரம்பிக்கப்பட்டமை
- ஒழுங்கமைக்கப்பட்ட மரணச்சடங்கு முறை காணப்பட்டமை
- இரும்புஉலோக பாவனை ஆரம்பிக்கப்பட்டமை
- நிரந்தர வசிப்பிடம் உருவானமை
- விவசாயம் ஆரம்பிக்கப்பட்டமை

( இரண்டு காரணிகளுக்கு )
( 02 x 02 = 04 புள்ளிகள் )


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

(iii)

- சிறுகுளங்களை மையமாகக் கொண்டு குடியிருப்புகள் ஆரம்பிக்கப்பட்டமை
- நதிகளுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் குடியேற்றங்கள் பரவியமை
- தொழில்களை அடிப்படையாகக் கொண்டு குடியேற்றங்கள் உருவானமை
  (உ + ம் மீனவர் கிராமம், குயவர் கிராமம் , துறைமுகத்தை அண்டிய கிராமம், கோபலகமம்.......)
- குடும்பங்களின் எண்ணிக்கை 5, 6, ..... 30 வரை காணப்பட்டமை
- கமிக கிராமத்தின் தலைவராவார்.
- கிராமங்கள் எல்லைப்படுத்தப்பட்டமை.
- நகர குடியிருப்புகள் தோற்றம் பெற்றமை

**( 02 + 03 = 05 புள்ளிகள் )**

(iv)

- விவசாயம் பயிர்ச்செய்கை, விலங்கு வேளாண்மை எனும் இரு பிரிவுகளின் கீழ் செயற்பட்டமை
- பயிர்ச்செய்கை – சேற்றுநிலப் பயிர்ச்செய்கை (நெற்பயிர்ச்செய்கை)
  - மேட்டு நிலப் பயிர்ச்செய்கை (சேனைப் பயிர்ச்செய்கை)
- உணவுத்தேவைக்காக பயிர்செய்தமை சிறுபோகம், பெரும்போகம், இடைப்போகம்
  (யால, மகா, அதரமெத)
- விலங்கு வேளாண்மை (பசுக்கள், ஆடுகள், கோழிகள்)

**( காரணிகள் 3+ விளக்கம் 3 )**
**( 03 + 03 = 06 புள்ளிகள் )**

03.நோக்கம்

- இராசரட்டை நாகரிக காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்பு முறைகளை அறிந்து அவை தொடர்பான தகவல்களை முன்வைப்பர்.

**3.** (i) *A* - அனுராதபுரம்
*B* - பொலன்னறுவை
*C* - மாகம

ஆகிய புராதன நிர்வாக மையங்கள் எந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகளை அண்மித்து அமைந்திருந்தன என்பதை, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து தொடரொழுங்கில் எழுதுக. (கலா ஓயா, கிரிந்தி ஓயா, மகாவலி கங்கை, வளவை கங்கை, மல்வத்து ஓயா, கல் ஓயா)

(03 புள்ளிகள்)

(ii) *A* - அனுராதபுர நகரத்திற்கு நீரை வழங்குவதற்கு நிர்மாணிக்கப்பட்டதாக கருதப்படுகின்ற **இரண்டு** வாவிகளைப் பெயரிடுக.

*B* - பிக்குகளின் பயன்பாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** தடாகங்களைப் பெயரிடுக.

(04 புள்ளிகள்)

(iii) வரலாற்றுக் காலத்தில் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பதற்கான தேவை ஏற்பட்டதற்கான காரணத்தை **இரண்டு** காரணிகளூடாகத் தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

(iv) *A* - குளக்கட்டு
*B* - கலிங்கல் (சொரொவ்வ / sluice)
*C* - கலிங்கற் தொட்டி (பிசோகொட்டுவ / sluice gate)
*D* - சுருங்கை (பிட்டவான / spill)

குளம் ஒன்றில் காணப்படும் மேற்குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப கூறுகளுள் ஏதேனும் **இரண்டின்** அமைப்பு, செயற்பாடு ஆகியன தொடர்பாக விபரிக்குக. (06 புள்ளிகள்)


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

(i)

A - மல்வத்து ஓயா

B - மகாவலி கங்கை

C - கிரிந்தி ஓயா **( 01 X 03 = 03 புள்ளிகள் )**

(ii)

A - திஸாவாவி, நுவரவாவி, பசவக்குளம் (அபயவாவி)

B - குட்டம் பொய்கை, தாமரைப் பொய்கை, யானைப் பொய்கை, குமாரப் பொய்கை

**( 02 + 02 = 04 புள்ளிகள் )**

(iii)

- விவசாயத்திற்காக நீரைப் பெற்றுக் கொள்ளல்.
- வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- நகர மக்களின் நீர்த் தேவையை பூர்த்தி செய்தல்
- வரட்சிக் காலத்தில் நீர்த்தேவையை பூர்த்தி செய்தல்
- அதிகரிக்கும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்திக்கான நீரைப் பெற்றுக்கொள்ளல்

**( 02 + 03 = 05 புள்ளிகள் )**

(iv) A **குளக்கட்டு அமைப்பு**

- இரு எச்சக் குன்றுகளை இணைத்து அமைக்கப்பட்டமை
- குன்றுகள் இல்லாத இடங்களில் ஆற்று வளைவுகளை பயன்படுத்தி குளக்கட்டு அமைக்கப்பட்டமை (உ + ம்) யோதவாவி
- சரளை, களிமண், மண், வெண்களி ஆகியவற்றை ஓர் அடுக்கின் மேல் இன்னொரு அடுக்காக இட்டு நன்கு அழுத்தி அமைக்கப்பட்டது.
- சில இடங்களில் குளக்கட்டினை அமைக்க பாறைத் தொடர்களை தெரிவு செய்தல். (உ + ம்) சொரபொரவாவி
- குவாட்சைட் பாறைகளின் மேல் குளக்கட்டுக்களை அமைத்தல். (உ + ம் மின்னேரியா)

**செயற்பாடு**

- பாரிய நீர்ப்பரப்பினைத் தாங்குதல்

B **கலிங்கல் அமைப்பு**

- விசாலமான கற்பாறைகளைப் பயன்படுத்தி குறிப்பிடத்தக்க உயரத்தில் அமைக்கப்பட்டிருத்தல்.
- பெரிய குளங்களில் ஈரக்கலிங்கல், உயர்க்கலிங்கல் என்பன காணப்படும்.

**செயற்பாடு :**

- பிரதான கால்வாய்க்கு நீரைத் திறந்து விடல்
- குளத்தில் இருக்கும் சேற்றினை வெளியேற்ற பயன்படுத்தப்படும் (ஈரக் கலிங்கல்)

C **கலிங்கற் தொட்டி அமைப்பு**

- கருங்கற்களைப் பயன்படுத்தி சதுரவடிவில் அமைக்கப்பட்டிருத்தல்



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**செயற்பாடு :**

- குளத்து நீரை கால்வாய்க்கு திறநது விடும் போது ஏற்படும் அமுக்கத்தினை குறைத்து நீரை திறந்து விடல்

**D சுருங்கை அமைப்பு**

- சிறு கற்களைப் பயன்படுத்தி ஒன்றுக்கொன்று இறுக்கமாக இணைத்து குளத்தின் ஓரத்தில் குளக்கட்டின் உயரத்திற்கு குறைவாக அமைக்கப்பட்டிருக்கும்.

**செயற்பாடு :**

- குளக்கட்டிற்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் குளத்தில் காணப்படும் மேலதிக நீரை வெளியேற்றல்.

**( 03 + 03 = 06 புள்ளிகள் )**

4. நோக்கம்

- இரண்டாம் நகர மயமாக்கல் காலப்பகுதியில் உருவான இராச்சியங்களையும் அவ்விராச்சியங்களில் காணப்பட்ட அரசியல் பொருளாதார கலாசார நடவடிக்கைகளையும் அறிந்து கூறுவர்.

4. (i) *A* - இராஜரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியின் பின்னர் இலங்கையின் வட பகுதியில் தோன்றிய இராச்சியத்தின் பெயர்
*B* - அந்த இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த வம்சத்தின் பெயர்
*C* - வரண்ட வலயத்தின் பல்வேறு பகுதிகளில் தோன்றிய சிறிய நிர்வாக அலகுகள் அழைக்கப்பட்ட பெயர்
ஆகியவற்றை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) *A* - இரண்டாவது நகரமயமாக்கக் காலப்பகுதியில் உயர் மலைக் குன்றுகளுக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** நிர்வாக மையங்கள்
*B* - மலைத் தொடர்கள், ஆறுகளை அண்மித்து நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** நிர்வாக மையங்கள்
ஆகியவற்றைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாவது நகரமயமாக்கக் காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற வர்த்தகத்தின் இயல்புகளை **இரண்டு** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கோட்டை இராச்சியத்தின் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன்,
*A* - நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு செயற்பட்ட விதம் பற்றியும்
*B* - அவரது ஆட்சிக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட கல்வி, இலக்கிய வளர்ச்சி பற்றியும்
சுருக்கமாக விபரிக்குக (06 புள்ளிகள்)

(i)

A - யாழ்ப்பாணம்

B - ஆரியச்சக்கரவர்த்தி

C - வன்னி / வன்னி இராச்சியம்

**( 01 x 03 = 03 புள்ளிகள் )**

(ii)

A - தம்பதெனியா, யாப்பகூவ, குருணாகல்.

B - கம்பளை, கண்டி /செங்கடகல

**( 02 + 02 = 04 புள்ளிகள் )**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) வெளிநாட்டு வர்த்தகம்

- கறுவா பிரதான வர்த்தகப்பொருள்
- வேறு பொருட்கள் ஏற்றுமதி - பாக்கு, மிளகு. ஏலம், சாதிக்காய்....
- வர்த்தகப் பொருட்கள்: ஏற்றுமதி - முத்து, மாணிக்கம், யானை, யானைத்தந்தம்
- அரசனிடம் வர்த்தக ஏகாதிபத்தியம் காணப்பட்டமை
- மேற்கு கரையோர துறைமுகங்களினை அடிப்படையாக கொண்டு வர்த்தகம் நிலவியது.
  (புத்தளம், கற்பிட்டி, கொழும்பு, காலி, சிலாபம்....
- சீனாவிலிருந்த பீங்கான் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமை.
- உள்நாட்டு வர்த்தகம் தொடர்பாக கடைவீதி இருந்தமை (ஆதாரம்: குருனாகல் விபரம் எனும் நூல்)

**( 02 + 03 = 05 புள்ளிகள் )**

(iv)

A. அரசியல்

- வன்னிப் பிரதேசங்களை கோட்டையின் கீழ்க் கொண்டு வந்தமை
- சப்புமல் குமாரனை அனுப்பி யாழ்ப்பானத்தை வெற்றி கொண்டமை.
- அம்புலுகல குமாரன் மூலம் மலைநாட்டு பிரதேச ஆட்சியாளனான ஜோதிய என்பவனின் கிளர்ச்சியை அடக்குதல்

B. - பிரிவேனாக்கள் உருவாக்கப்பட்டமை
  (உ + ம்: சுனேத்திராதேவி, காரகல பத்மாவதி....)
- பண்டிதர்கள் உருவானமை
  (உ + ம்: தொட்டகமுவ ஶ்ரீராகுலதேரர், காரகால வனாரத்னதேரர், விதாகம-மைத்திரிதேரர்....)
- தூதுகாவியங்கள் (கிராசந்தேசய ஹங்சந்தேசய சலலகினி பரவிசந்தேசய...)
- பிற இலக்கிய நூல்கள் எழுதப்பட்டமை (குத்தில காவியம், லோவட சங்கராவ, போர் காவியம்...)
- 6ம் பராக்கிரமபாகுவால் எழுதப்பட்ட நூல் (ருவென்மல் நிகண்டம்)

**( 03 + 03 = 06 புள்ளிகள் )**

5. நோக்கம்

- இலங்கையின் இறுதி இராச்சியமான கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பு, பணிகள். சமூக பொருளாதார, கலாசார நிலைமைகள் பற்றிய விபரங்களை எடுத்துக் கூறுவர்.

5. (i) கண்டி இராச்சியத்துக்குரியதாகக் காணப்பட்ட நிர்வாகப் பிரதேசங்களுள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) கண்டி இராச்சிய காலப்பகுதியில் பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்களின் உத்தியோகபூர்வ பெயர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து தொடர் ஒழுங்கில் எழுதுக.

*A* - மன்னனின் யானைகளுக்குப் பொறுப்பானவர்
*B* - அரச மாளிகைக்கு உணவு குடிபானங்களை வழங்குபவர்
*C* - மன்னனுக்கு வேண்டிய ஆடையணிகளுக்குப் பொறுப்பானவர்
*D* - மிகச்சிறிய நிர்வாக அலகான கிராமத்துக்குப் பொறுப்பானவர்

(விதானை, கோறளை, சலுவடன நிலமே, கஜநாயக்க நிலமே, பத்வடன நிலமே, கொடித்துவக்கு நிலமே, தியவதன நிலமே) (04 புள்ளிகள்)

(iii) கண்டிய (மலைநாட்டு) சமூகத்தில் காணப்பட்ட திருமண முறைகள் பற்றி விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சிய காலப்பகுதியில்,

*A* - விவசாயம்
*B* - கைத்தொழில்

ஆகியன ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறையினை எடுத்துக்காட்டுக. (06 புள்ளிகள்)



Download all Past Papers - https://bookbeekid.com/resource/past-papers/

(i)

- ஏழு கோறளை
- ஊவா
- மாத்தளை
- வலப்பனை
- பிந்தென்ன
- வெல்லஸ்ஸ
- நுவரகலாவிய
- நான்கு கோறளைகள்
- மூன்று கோறளைகள்
- சப்பிரகமுவ

(தரம் 10 வரலாறு பக்கம் 124)

(இவற்றுள் ஏதாவது மூன்று எழுதப்படல் வேண்டும்)

**( 01 X 03 = 03 புள்ளிகள் )**

(ii)

A - கஜநாயக்க நிலமே

B - பத்வடன நிலமே

C - சலுவடன நிலமே

D - விதானை

**( 01 X 04 = 04 புள்ளிகள் )**

(iii)

- மூவகைத் திருமணங்கள் (தீக, பின்ன, ஒரேவீட்டில் சாப்பிடுதல்)
- திருமணங்கள் குல அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டமை.

**( 02 + 03 = 05 புள்ளிகள் )**

(iv)

A - விவசாயம்

- பிரதானமாக விவசாயப் பொருளாதார முறை காணப்பட்டமை
- நெல்விவசாயம்
- வீட்டுத் தோட்டச் செய்கை
- சேனைப் பயிர்செய்கை
- விலங்கு வேளாண்மையும் முக்கியம் பெற்றிருத்தல்
- விவசாய நடவடிக்கைக்காக “அத்தம்” முறை பயன்படுத்தப்பட்டமை.

B - கைத் தொழில்

- வாசனைத்திரவியங்கள் தொடர்பான கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்து காணப்பட்டமை.
- பல்வேறு கைத்தொழில்கள் காணப்பட்டமை.

  உ. ம்: விவசாய உபகரணங்கள், வனைதல், புடவைக் கைத்தொழில், ஆபரணக்கைத் தொழில், பித்தளைப் பொருட்கள் முதலியன....
- பாரம்பரிய கலைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டமை.

**( 03 + 03 = 06 புள்ளிகள் )**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

6. நோக்கம்

- பிரித்தானியர் இந்நாட்டில் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டமை, திருகோணமலை துறைமுக அமைவிட முக்கியத்துவம், 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அவர்களுக்கு எதிராக இடம் பெற்ற போராட்டங்கள் பற்றி விளக்கமாகக் கூறுவர்.

**6.** (i) இந்து சமுத்திரத்தைச் சூழவுள்ள நாடுகளுடன் வர்த்தகப் போட்டியில் ஈடுபட்ட (பிரித்தானியா தவிர்ந்த) ஐரோப்பிய நாடுகள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) திருகோணமலைத் துறைமுகம் பிரித்தானியருக்கு முக்கியத்துவமானதாய் அமைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கி.பி. 1815 இல் பிரித்தானியருக்கு அதிக முயற்சியின்றி கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றக்கூடியதாய் இருந்தமைக்கான காரணத்தை **இரண்டு** காரணிகளினூடாக எடுத்துக்காட்டுக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டு மூன்று வருடங்களின் பின்னர் ஆரம்பித்த தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த **மூன்று** காரணிகளைக் குறிப்பிட்டு, அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(i)

1 - போர்த்துக்கல்
2 - ஒல்லாந்து
3 - பிரான்ஸ்

**( 01 x 03 = 03 புள்ளிகள் )**

(ii)

- திருகோணமலை துறைமுகம் வங்காள விரிகுடாவை நோக்கி அமைந்திருந்தமை.
- இந்தியாவின் கிழக்குக் கரையோரத்தில் ஆங்கிலேயரின் கடற்படை பலத்தை பாதுகாத்துக் கொள்ள இத் துறைமுகம் முக்கியத்துவமாயிருத்தல்
- வடகிழக்கு பருவக் காற்றுக் காலத்தில் கப்பல்களைப் பாதுகாத்துக் கொள்ள திருகோணமலை துறைமுகத்தை பயன்படுத்த முடிந்தமை.

**( 02 + 02 = 04 புள்ளிகள் )**

(iii)

- ஜோன் டொயிலியின் மதிநுட்பம்
- பிரதானிகள், மதகுருமார்கள், பொதுமக்கள் அனைவரும் ஸ்ரீவிக்கிரமராஜசிங்க மன்னன் மேல் வெறுப்புக் கொண்டிருந்தமை
- அக்காலப்பகுதியில் மலை நாட்டு பௌதீக சூழல் சம்பந்தமான போதிய அறிவை ஆங்கிலேயர் பெற்றிருந்தமை.
- ஸ்ரீவிக்கிரமராஜசிங்க மன்னனின் தூர நோக்கற்ற செயற்பாடுகள்
- பிரித்தானியரிடம் காணப்பட்ட இராணுவ பலம்

**( 02 + 03 = 05 புள்ளிகள் )**

(iv)

- சுதந்திரத்தை இழந்தமையும் அரசன் இல்லாமை பற்றிய மனவேதனையும்
- சமய, கலாசார, பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் உருவாகியமை.
- மலைநாட்டு பிரதானிகளுக்கு ஏற்பட்ட பிரச்சனைகள்
- ஊவா – வெல்லஸ்ஸ பகுதிக்கு ஹஜ்ஜி மரிக்கார் என்ற முஸ்லீம் ஒருவரை முகாந்திரம் பதவிக்கு நியமித்தமை.

**( 03 + 03 = 06 புள்ளிகள் )**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. நோக்கம்

- சுதந்திரத்தின் பின் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல், பொருளாதார சமூக துறைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக குறிப்பான விளக்கங்களை எடுத்துக் கூறுவர்.

7. (i) இலங்கையில்,

*A* - விவசாயம் மற்றும் காணி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தலைவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்த முதலாவது அரசியல் யாப்பு

*B* - விவசாயக் குடியேற்றத் திட்டத்தின் தந்தை எனக் கருதப்படுகின்ற மக்கள் தலைவர்

*C* - ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பலநோக்குத் திட்டம்

ஆகியவற்றை ஒழுங்கு முறையில் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) விவசாயக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட **இரண்டு** நோக்கங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகவும் பொருத்தமானதாக அமைவது இலங்கையின் உலர் வலயங்களே என்பதை **இரண்டு** காரணிகளின் மூலம் எடுத்துக்காட்டுக. (05 புள்ளிகள்)

(iv) "இலங்கையின் ஏனைய நதிகளை விட மகாவலி கங்கை, பல்நோக்கு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விசேடமானதாகும்." என்பதனை **மூன்று** காரணிகளினூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

(i)

A - டொனமூர் அரசியல் யாப்பு / 1931 அரசியல் யாப்பு

B - D. S சேனநாயக்க அவர்கள்

C - கல்லோயா

**( 01 X 03 = 03 புள்ளிகள் )**

(ii)

- ஈரவலயத்தில் பெருகிச் செல்லும் சனத்தொகை நெருக்கடிக்கு தீர்வு காணல்
- நாட்டின் உணவுற்பதியை பெருக்குதல்
- உலர்வலயத்தில் உள்ள புராதன குளங்கள், கால்வாய்களைப் புனரமைத்து அங்குள்ள நிலத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளல்
- ஈரவலயத்தில் காணப்படும் நிலப்பற்றாக்குறைக்கு பரிகாரம் காணல்.

**( 02 + 02 = 04 புள்ளிகள் )**

(iii)

- உலர் வலயத்தில் சனத்தொகை குறைந்த சமவெளிகள் காணப்பட்டமை
- நெல் விவசாயத்திற்கு பொருத்தமான கால நிலையும் மண்வளமும் காணப்பட்டமை.
- புனர் நிர்மாணம் செய்யக்கூடிய பல குளங்களும் கால்வாய்களும் உலர் வலயத்தில் காணப்பட்டமை.

**( 02 + 03 = 05 புள்ளிகள் )**

(iv)

- சனத்தொகை ஐதான சமவெளிகள் ஊடாக மகாவலி நதி பாய்ந்து செல்கின்றமை
- கிளை நதிகள் பலவற்றால் மகாவலி கங்கை ஊட்டம் பெறுகின்றமை
- கிளை நதிகள் தென்மேல் பருவக்காற்றாலும். வடகீழ் பருவக்காற்றாலும், மேற்காவுகையாலும் நீரைப் போஷிக்கின்றமை.
- நதியின் உயர் நிலப் பிரதேசங்கள் நீர்மின்சார உற்பத்திக்கு சாதகமாயிருத்தல்
- அபிவிருத்தி செய்யக் கூடிய பல புராதன கால்வாய்கள் மகாவலியுடன் இணைந்து காணப்படுகின்றமை. (உ + ம்: எலகர, மினிப்பே, அங்கமடில்ல, பப்பதந்தி)

**( 03 + 03 = 06 புள்ளிகள் )**

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

8. நோக்கம்

- ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்தில் தோற்றம் பெற்ற நகரங்கள், கண்டுபிடிப்பக்கள், படைப்புக்கள், நாடுகாண் பயணங்கள் தொடர்பான விளக்கங்கள் பற்றிய தகவல்களை எடுத்துக் கூறுவர்.

**8.** (i) மறுமலர்ச்சியினால் பிரசித்தமான இத்தாலிய நகரங்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வருவனவற்றோடு தொடர்புடையவர்களை ஒழுங்குமுறையில் பெயரிடுக.

*A* - புவி கோளவடிவமானது என்பதனைக் கண்டுபிடித்தல்
*B* - தொலைநோக்கியை கண்டுபிடித்தல்
*C* - புவியீர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்தல்
*D* - அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தல் (04 புள்ளிகள்)

(iii) *A* - மானிடவாதம் என்பதனால் கருதப்படுவது யாது?
*B* - மறுமலர்ச்சிக் காலத்தில் பிரபல்யமான சித்திரப் படைப்புகள் **மூன்றினைப்** பெயரிடுக. (05 புள்ளிகள்)

(iv) நாடுகாண் பயணத்தின் விளைவுகள் **மூன்றினை** விபரிக்குக. (06 புள்ளிகள்)

(i)

- புளோரன்ஸ்
- வெனிஸ்
- ஜெனோவா
- உரோம்

**( 01 x 03 = 03 புள்ளிகள் )**

(ii)

A - நிக்கலஸ் கொப்பனிகஸ்
B - கலிலியோ கலிலி
C - சேர் ஐசாக் நியூட்டன்
D - ஜொகன்னஸ் கூட்டன்பேக்

**( 01 x 04 = 04 புள்ளிகள் )**

(iii)

A - மனிதன் மேன்மையானவன் எனக் கருதப்பட்டமை

B - மொனாலிசா
- இறுதித் தீர்ப்பு
- இறுதி இராப்போசனம்
- ஆதாமின் சித்திரம்
- தேவ தூதர்கள் இருவரின் சித்திரம்

**( 02 + 03 = 05 புள்ளிகள் )**

(iv)

- புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டமை
(உ + ம்: பிலிப்பைன்ஸ், கனடா, மேற்கிந்திய தீவுகள் முதலியன....)
- புதிய வணிகப் பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வியாபார நடவடிக்கைகள் விரவடைந்தமை
- குடியேற்றவாதம் ஆரம்பமானமை
- ஐரோப்பியர்களின் சிந்தனைகள் உலகம் முழுவதும் பரவியமை
- ஆசிய – ஆபிரிக்க நாடுகளில் ஐரோப்பியரின் ஆதிக்கம் பரவியமை
- உலகம் கோளமயமானது என்பது நிரூபிக்கப்பட்டமை

**( 03 + 03 = 06 புள்ளிகள் )**


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

9. நோக்கம்

- அமெரிக்க சுதந்திரப் போராட்டம், புரட்சிகள் அவற்றுக்கான காரணங்கள், ஏற்பட்ட விளைவுகள் மாற்றங்கள் தொடர்பான கருத்துக்களை அறிந்து கூறுவர்.

**9.** (i) அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவிய ஐரோப்பிய இனத்தவர் **மூவரைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) அமெரிக்க சுதந்திரப்போருக்கு வழிவகுத்த காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பிரான்சியப் புரட்சியில் செல்வாக்குச் செலுத்திய பொருளாதாரக் காரணிகள் **இரண்டினை** விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ரஷ்யப் புரட்சியின் விளைவுகளால் உலக அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் **இரண்டை** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(i) - போர்த்துக்கேயர்
- ஒல்லாந்தர்
- பிரான்சியர்
- பிரித்தானியர்
- ஸ்பானியர்

**( 01 x 03 = 03 புள்ளிகள் )**

(ii)

- பிரித்தானியர் பின்பற்றிய தாய்நாட்டிற்குச் சாதகமான பொருளாதாரக் கொள்கை
- குடியேற்றவாசிகளின் எண்ணங்கள், மனநிலைகள் கருத்துக்களைப் பிரித்தானிய அரசாங்கம் சரியாகப் புரிந்து கொள்ளாமை.
- குடியேற்றவாசிகளின் நீதியான போராட்டங்களை கட்டுப்படுத்த பிரித்தானியா நடவடிக்கை எடுத்தமை.
- 1763 ஆம் ஆண்டின் பின்னர் அமுல் செய்யப்பட்ட புதிய வரிகள்.
- சுதந்திரம் தொடர்பாக குடியேற்றவாசிகளிடையே காணப்பட்ட ஆர்வம்.

**( 02 + 02 = 04 புள்ளிகள் )**

(iii)- அரசினதும் அரச குடம்பத்தினரதும் ஆடம்பர வாழ்க்கையினால் ஏற்பட்ட அதிக செலவு.
- தேவையற்ற யுத்த செலவுகள்
- வினைத்திறனற்ற வரிமுறைகள்

(டெலி, கெபெல், கெப்பிடேஷன்)

**( 02 + 03 = 05 புள்ளிகள் )**

(iv)- சமவுடமைக் கொள்கை உலகம் பூராவும் பரவியமை.
- சமவுடமைக் கொள்கை கொண்ட அரசாங்கங்கள் உருவானமை.

(உதாரணம் : சீனா, வடகொரியா, கிழக்கு, ஜேர்மனி, கியூபா)
- ரஷ்யாவை மையமாகக் கொண்ட சமவுடமை அணி உலகில் தோற்றம் பெற்றமை.

**( 02 + 04 = 06 புள்ளிகள் )**


Download all Past Papers > https://bookbeekid.com/resource/past-papers